2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

189—

போக்குவரத்துப் பணிமனை

*__4404__—**திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் மாநகரப் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனை அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி பணிமனை அமைக்க, நானும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகச் சென்று, இடத்தினை ஆய்வு செய்து, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் நிலம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு, நிலம் கிடைக்கப்பெற்றவுடன், பணிமனை அமைக்கின்ற பணியினை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க பெத்திக்குப்பம் ஊராட்சி, சர்வே எண் 173/1ஏ என்ற இடம் தேர்வு செய்யப்பட்டு, ஊராட்சி மன்றத்தின் சார்பாக No Objection Certificate மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, பணிமனை அமைக்க எப்போது ஆவன செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சரியாகப் பராமரிக்கப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு, பொதுமக்களுக்குத் தரமான சேவை வழங்க வேண்டுமென, இரண்டு ஆண்டுகளில் 43 புதிய பணிமனைகள் தொடங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க.-வின் 5 ஆண்டு கால ஆட்சியில் தொடங்கப்பட்ட மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை வெறும் 10 மட்டுமே.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்த 1 லிட்டர் டீசல் எரிபொருளில் 5.25 கி.மீ. தூரம் மட்டும்தான் இயக்கப்பட்டது; அது படிப்படியாக உயர்ந்து, 5.27 கி.மீ. ஆக இயக்கத் தூரம் இன்றைக்கு உயர்ந்துள்ளது. இதன்மூலம், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 12-1/2 கோடி ரூபாய் சேமிப்பு ஏற்பட்டு, செலவினம் குறைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிலம் கிடைக்கப் பெற்றவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பணிமனை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியில் புதிய பணிமனை அமைப்பதற்குத் தேவையான நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை ஏதேனும் இருந்தால், எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கத் தயாராக உள்ளேன். எனவே, கும்மிடிப்பூண்டி மக்களின் 25 ஆண்டு கால கனவான பணிமனையினை இந்த ஆண்டே கட்டி, மக்கள் பயன்பாட்டிற்கு விடப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய பணிமனை அமைக்க வேண்டுமென்றால் 25 இலட்சம் ரூபாய் நிதி போதாது; ஒரு கோடி ரூபாய் நிதி தேவை. இந்த 1 கோடி ரூபாய்க்கு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. பணிமனை அமைப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்ட நிலம், போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, திட்ட மதிப்பீட்டிற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, விரைவில் புதிய பணிமனை அமைக்கின்ற பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.